சங்கத்திடம் ஊரிலுள்ள நிலங்களை எல்லாம் சமமாகப் பங்கிட்டுக் கொடுக்கும்படியாக அதிகாரம் கொடுக்கப்பட்டது. ஆனால் நம் நாட்டிலே தாசில்தாரிடம் அதிகாரத்தைக் கொடுப்பார்களே தவிர மக்களிடம் கொடுக்க மாட்டார்கள். ரெவின்யூ இன்ஸ்பெக்டரிடம் ஒப்படைத்தாலும் ஒப்படைப்பார்களே தவிர மக்களிடம் ஒப்படைக்கமாட்டார்கள். இவர்களுக்கு மக்களிடம் எங்கே நம்பிக்கை இருக்கிறது, அரசாங்க அதிகாரிகளிடம் தானே நம்பிக்கை இருக்கிறது. அதிகார வர்க்கத்தினரின் கையிலே மேலும்மேலும் பல அதிகாரங்களைக் கொடுத்து அவர்கள் அதைத் துஷ்பிரயோகம் செய்யவும், அந்த அதிகாரத்தைக்கொண்டு பணத்தைச் சுரண்டவும் வசதியைத்தான் செய்து கொடுப்பார்களே தவிர மக்களுக்கு நல்ல முறையில் உதவி செய்யவேண்டுமென்ற கருத்தே இவர்களுக்குக் கிடையாது.

“ அவர்களுடைய அடிப்படை எண்ணத்திலேயே தவறான கருத்துக்கள் இருப்பதின் காரணமாகத்தான் இன்றையதினம் இந்த நாடகத் தடைமசோதாவே கொண்டுவரப்படுகிறது. அதிலே சர்க்கார் மக்களைநம்பவில்லை, மக்களுக்கு ஏற்படக்கூடிய பொருள் நஷ்டத்தையும் மனக் கஷ்டத்தையும் உணரவில்லை. ஆகவே சொல்வது ஒன்றே தவிர வேறு ஒரு உட்கருத்தை வைத்தே இந்த மசோதாவை அவர்கள் கொண்டுவருகிறார்கள், அவர்களுக்கு அந்தரங்க சுத்தி கிடையாது, எந்தக் காரியத்திற்காக இந்த மசோதா கொண்டுவரப்படுவதாக அவர்கள் சொல்லுகிறார்களோ அந்தக் காரியத்திற்கு இந்த மசோதாவே தேவையில்லை, ஆகவே அவர்களுடைய அந்தரங்க சுத்திக்கே விரோதமான இந்த மசோதாவை அவர்கள் கொண்டுவந்திருப்பதன் காரணமாக அதைப் பலமாக ஆட்சேபித்து அதை வாபஸ் வாங்கவேண்டுமென்றும் தெரிவித்துக் கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.”

* THE HON. SRI C. SUBRAMANIAM :—“ Sir, shall I reply to-day or tomorrow? because I am likely to take some time.”

SRI M. KALYANASUNDARAM :—“ If he replies tomorrow, he will encroach upon the time allotted tomorrow for clause by clause consideration of the Bill.”

MR. SPEAKER :—“ I have no objection if the House agrees to it.”

* THE HON. SRI C. SUBRAMANIAM :—“ I shall reply tomorrow.”

MR. SPEAKER :—“ The Hon. Minister says that he will reply tomorrow.”

SRI P. RAMAMURTHI :—“ If I had known it before, I would have taken some more time to finish my speech. I thought the Hon. Minister would reply to-day.”

MR. SPEAKER :—“ I now adjourn the House till 10 a.m. tomorrow.”

The House then adjourned.

VI.—PAPER LAID ON THE TABLE OF THE HOUSE.

List of demands raised by the Madras Race Course Labour Union on behalf of the workers of the Madras Race Course, Guindy, and the decision of the Government on the demands (vide answer to Legislative Assembly starred question No. 72 given on 6th December 1954).